**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 216/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW4 | Examined as : | PW3 |
| Name | : ஆசைதம்பி | Defence | : |
| Father Name | : சின்னப்பிள்ளை | Court | : |
| Village | : வல்லம் | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 56 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 09.02.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை

நான் வல்லம் முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். கடந்த 27.08.2020 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் எதிரிகள் கலையழகனின் வீட்டிற்குள் சென்று அவரது மனைவி அனுசுயாவை தகாத வார்த்தைகளால் திட்டினார்களா என்றால் இல்லை. 1 வது எதிரி கலைவாணனும், 4 வது எதிரி சத்தியாவும் சேர்ந்து அசா1 அனுசுயாவின் முடியை பிடித்து இழுத்து வந்து கீழே தள்ளினார்களா என்றால் இல்லை. அதை தடுக்க வந்த கலையழகனின் பாட்டி சுசீலாவையும், அனுசுயாவையும் எதிரிகள் கையால் மாறி மாறி அடித்தார்களா என்றால் இல்லை. 1 வது எதிரி அவரது வீட்டிலிருந்து இரும்பு பைப்பை எடுத்து வந்து உங்களை கொலை செய்யாமல் விடமாட்டேன் என மிரட்டினார்களா என்றால் இல்லை. மேற்கூறிய செயல்களை எதிரிகள்

புரிந்ததாகவும், அதனை நான் நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டுதற்போது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்., குறுக்கு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 216/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW6 | Examined as : | PW4 |
| Name | : தனராஜன் | Defence | : |
| Father Name | : மூர்த்தி | Court | : |
| Village | : கீழத்தெரு, வல்லம் | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 30 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 09.02.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் வல்லம் கீழத்தெரு என்ற முகவரியில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு கலைவாணன் குடும்பத்திற்கும், கலையழகன் குடும்பத்திற்கும் இடையே முதல் நாள் நடந்த தகராறு சம்பந்தமாக மறுநாள் காலை 09.00 மணிக்கு செம்பனார்கோவில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், ராஜேஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது எத்தனை பக்கம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு

சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து போட்டதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 216/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW7 | Examined as : | PW5 |
| Name | : ராஜேஷ் | Defence | : |
| Father Name | : ராஜேந்திரன் | Court | : |
| Village | : கீழத்தெரு, வல்லம் | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 29 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 09.02.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் வல்லம் கீழத்தெரு என்ற முகவரியில் வசித்து சமையல் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை. கலைவாணன் குடும்பத்திற்கும், கலையழகன் குடும்பத்திற்கும் இடையே முதல் நாள் நடந்த தகராறு சம்பந்தமாக மறுநாள் செம்பனார்கோவில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், தனராஜன் என்பவரும் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பட்டியல் சாட்சி 5 முனியம்மாள் எனது தாயாராவார். அவருக்கு விபத்து ஏற்பட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு நடக்க முடியாத நிலையில் உள்ளார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது

எத்தனை பக்கம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து போட்டதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.